# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2021

## வளர் தமிழ் 10

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள்

அ) 247 ☐ ஆ) 20 ☐

இ) 100 ☐ ஈ) 147 ☐

2. நாட்டிய அரங்கமாகத் தோன்றும் மருதத்தில் யாழ் வாசிப்பவர்

அ) மயில்கள் ☐ ஆ) முகில்கள் ☐

இ) வண்டுகள் ☐ ஈ) முழவுகள் ☐

3. தெருவோரம் என்ற சொல்லைப் பிரித்தால்

அ) தெரு + ஓரம் ☐ ஆ) தெருவ் + ஓரம் ☐

இ) தெரு + வோரம் ☐ ஈ) தெருவ் + வோரம் ☐

4. குமரிக்கண்டத்தின் மேற்கோடியில் இருந்த பன்மலை அடுக்குத்தொடர்

அ) விந்தியமலை ☐ ஆ) பொதிகைமலை ☐

இ) இமயமலை ☐ ஈ) குமரிமலை ☐

5. சால, உறு, தவ, நனி என்பன

அ) பெயர்ச்சொற்கள் ☐ ஆ) உரிச்சொற்கள் ☐

இ) இடைச்சொற்கள் ☐ ஈ) வினைச்சொற்கள் ☐

6. ‘திராவிட மொழி நூல் ஞாயிறு’ எனும் பட்டத்தைப் பெற்றவர்

அ) மறைமலையடிகள் ☐ ஆ) தேவநேயப்பாவாணர் ☐

இ) பரிமாற்கலைஞர் ☐ ஈ) ஆறுமுகநாவலர் ☐

7. ஓர் எழுவாயில் பல சொல்லியங்கள் தொடரும் இடங்களில் பயன்படுத்தப்படும் நிறுத்தற்குறியீடு

அ) அரைப்புள்ளி ☐ ஆ) காற்புள்ளி ☐

இ) முக்காற்புள்ளி ☐ ஈ) முற்றுப்புள்ளி ☐

8. “பூவார் சோலை மயிலால” எனப்பாடியவர்

அ) பாரதியார் ☐ ஆ) இளங்கோவடிகள் ☐

இ) கம்பன் ☐ ஈ) முடியரசன் ☐

9. வில்லிசையில் வில்லோடு இசைக்கப்பட்ட இசைக்கருவி

அ) உடுக்கை ☐ ஆ) வீணை ☐

இ) வயலின் ☐ ஈ) மேளம் ☐

10. பின்வருவனவற்றுள் நெட்டெழுத்துகள்

அ) ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ ☐ ஆ) அ இ உ எ ஒ ஔ ☐

இ) க் ச் ட் த் ப் ற் ன் ☐ ஈ) ய் ர் ல் வ் ழ் ள் ன் ☐

11. தமிழ் ஆட்சிமொழியாக உள்ள நாடுகளில் ஒன்று

அ) நெதர்லாந்து ☐ ஆ) இத்தாலி ☐

இ) நோர்வே ☐ ஈ) சிங்கப்பூர் ☐

12. வில்லுப்பாட்டுக்குழுவில் இடம்பெறுபவர்

அ) அறுவர் ☐ ஆ) இருவர் ☐

இ) எழுவர் ☐ ஈ) மூவர் ☐

13. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நடைபெற்ற ஆண்டு

அ) 2009 ☐ ஆ) 2008 ☐

இ) 2010 ☐ ஈ) 2007 ☐

14. **பழமொழி:**

தேட்டத்தின் பெருமை என்ற கருத்தை விளக்கும் பழமொழி

அ) நிறைகுடம் தளம்பாது. ☐

ஆ) பதறாத கருமம் சிதறாது. ☐

இ) தன்வினை தன்னைச்சுடும். ☐

ஈ) சிறுதுளி பெருவெள்ளம். ☐

15. வில் ―――――― நிலத்துக்குரிய போர்க்கருவி

அ) நெய்தல் ☐ ஆ) முல்லை ☐

இ) குறிஞ்சி ☐ ஈ) மருதம் ☐

16. கட்டினான் என்பதன் பிறவினை

அ) கட்டுவான் ☐ ஆ) கட்டுவித்தான் ☐

இ) கட்டுகின்றான் ☐ ஈ) கட்டியவன் ☐

17. காரண இடுகுறிப்பெயர்

அ) முள்ளி ☐ ஆ) பாம்பு ☐

இ) காற்று ☐ ஈ) பறவை ☐

18. ஏதிலியர் என்பதன் பொருள்

அ) ஆலோசகர் ☐ ஆ) காப்போர் ☐

இ) கதியற்றோர் ☐ ஈ) பெரியோர் ☐

19. குமரிக்கண்டத்தில் ஓடிய ஆறுகளில் ஒன்று

அ) காவிரி ☐ ஆ) பஃறுளி ☐

இ) கங்கை ☐ ஈ) கோதாவரி ☐

20. பொதுமொழிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) செவ்வாய் ☐ ஆ) பொன்முடி ☐

இ) நட ☐ ஈ) கண்ணன் ☐

21. ஆப்கானித்தானிய கைபர் கணவாய் ஊடாக நாவலந்தீவினுள் நுழைந்தவர்

அ) சோழர் ☐ ஆ) பாண்டியர் ☐

இ) ஆங்கிலேயர் ☐ ஈ) ஆரியர் ☐

22. நாம் தூய்மையாக இருந்தால் நோய்நொடி இன்றி வாழலாம். இதில் நோய்நொடி என்பது

அ) இரட்டைக்கிளவி ☐ ஆ) அடுக்குத்தொடர் ☐

இ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஈ) இணைமொழி ☐

23. பறவை கூட்டிலிருந்து பறந்து சென்றது. இச் சொல்லியம் உணர்த்தும் பொருள்

அ) ஒப்புப்பொருள் ☐ ஆ) நீங்கற்பொருள் ☐

இ) ஏதுப்பொருள் ☐ ஈ) எல்லைப்பொருள் ☐

24. போற்றுவர் என்பதன் விகுதி.

அ) அர் ☐ ஆ) ஆர் ☐
இ) போற்று ☐ ஈ) ற் ☐

25. மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன

அ) ஐம்புலன்கள் ☐ ஆ) ஐம்பால் ☐
இ) ஐம்பூதங்கள் ☐ ஈ) ஐம்பொறிகள் ☐

26. கார்த்திகை பூத்துக் குலுங்கியது. இதில் இடம்பெற்றுள்ள ஆகுபெயர்

அ) பொருளாகுபெயர் ☐ ஆ) குணவாகுபெயர் ☐
இ) தொழிலாகுபெயர் ☐ ஈ) காலவாகுபெயர் ☐

27. 'ஔ' என்ற எழுத்தின் இன எழுத்து

அ) இ ☐ ஆ) உ ☐
இ) ஊ ☐ ஈ) அ ☐

28. தமிழரது வீரத்தைப் பற்றிக் கூறும் நூல்

அ) புறநானூறு ☐ ஆ) மூதுரை ☐
இ) நாலடியார் ☐ ஈ) பட்டினப்பாலை ☐

29. அவன் வந்தேன் என்பது

அ) இடவழு ☐ ஆ) காலவழு ☐
இ) பால்வழு ☐ ஈ) திணைவழு ☐

30. இமயத்தில் விற்கொடி பொறித்தவன்

அ) நெடுஞ்சேரலாதன் ☐ ஆ) குலோத்துங்கன் ☐
இ) நரசிம்மபல்லவன் ☐ ஈ) குமணன் ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

முல்லைத்தீவின் கடலோர வளைகுடா. அங்கே பீரங்கிகள் பொருத்தப்பட்ட ஒரு கோட்டை ஆங்கிலேயரால் கட்டப்பட்டு இறுமாப்போடு நிமிர்ந்து நிற்கிறது. இக்கோட்டை வன்னிமண்ணின் அரணுக்கு அச்சுறுத்தலாக இருந்தது. இக்கோட்டையைத் தகர்க்க எண்ணினான் பண்டாரவன்னியன். ஒரு வைகறைப்பொழுது வன்னியின் படைகள் கோட்டையைச் சூழ்கிறது. வன்னியின் வீரமறவர்கள் எதற்கும் அஞ்சாத நெஞ்சுரம் கொண்டவர்கள். அவர்கள் கோட்டையை முற்றுகை இடுகின்றனர். கோட்டையிலிருந்து பீரங்கிகள் முழங்குகின்றன. ஆங்கிலேயக் கடற்படைக் கப்பல்களிலிருந்து உதவிப்படை விரைகிறது. வன்னி மறவர்கள் கடலில் வைத்தே அவர்களுக்கு வீரமரணம் அளித்தனர். தாக்குப் பிடிக்க முடியாத ஆங்கிலேயப்படை கோட்டையை விட்டுவிட்டுத் தப்பியோடினர். பீரங்கிகள் வன்னியரால் கைப்பற்றப்பட்டன. கோட்டை தகர்க்கப்பட்டது. இறுமாந்து நின்ற ஆங்கிலேயக்கோட்டை சாம்பல் மேடாகக் குவிந்தது.

1. வன்னி மண்ணின் அரணுக்கு அச்சுறுத்தலாக இருந்தது எது?

2. எதற்கும் அஞ்சாத நெஞ்சுரம் கொண்டவர்கள் யாவர்?

3. கோட்டையிலிருந்து எவை முழங்குகின்றன?

4. எது சாம்பல் மேடாகக் குவிந்தது?

5. கோட்டையைத் தகர்க்க எண்ணிய மன்னன் யார்?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. இந்தியாவிற்கும் பாகித்தானுக்கும் இடையே இருந்த தமிழரது நாகரிகம் எது?

______________________________

______________________________

2. அவுத்திரேலியா, ஆபிரிக்கா ஆகிய பெருநிலப்பரப்புகள் பிரிந்து போனதற்கான கரணியம் யாது?

______________________________

3. குமரிக்கண்டம் கடலில் மூழ்கிய செய்தியைக் கூறும் நூல் எது?

______________________________

4. வில்லுப்பாட்டுக்குழுவின் தலைவரை எவ்வாறு அழைப்பர்?

______________________________

5. தமிழ்மொழிவரலாறு, வடமொழி வரலாறு என்ற ஆய்வு நூல்களை எழுதியவர் யார்?

______________________________

______________________________

6. கார்முகிலைக் கண்டால் மயில்கள் என்ன செய்யும்?

______________________________

7. எதற்காகச் செங்குட்டுவன் இமயத்தில் கல் எடுக்கச் சென்றான்?

______________________________

புள்ளிகள் 10

**4. பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

மண்ணில் பிறந்த முதல்மொழி
நம் தாய்மொழியாம் தமிழ்மொழி

ஒழுக்கத்துடனே நீ வாழ்ந்தால்
உலகம் உன்னைப் போற்றிடும்

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வருவனவற்றுக்கு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

   அ) செயப்பாட்டுவினை

   ______________________________

   ஆ) வினாச் சொல்லியம்

   ______________________________

2. தரப்பட்டுள்ள உவமையணியின் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றை தருக.
   தாமரைமுகம், கயல்விழி

| உவமானம் | உவமேயம் | பொதுத்தன்மை |
|---|---|---|
| | | |
| | | |

3. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

   காரணப்பெயர் ______________

   எதிர்காலப்பெயரெச்சம் ______________

   வினையாலணையும் பெயர் ______________

4. கீழ்வரும் சொற்களின் புணர்ச்சி வகைகளைக் கண்டறிந்து எழுதுக.

   1. குயிலினம் ______________
   2. மட்குடம் ______________
   3. வட்டமேசை ______________

5. வேற்றுமை உருபு இடம்பெறுமாறு சொல்லியம் எழுதுக.

   6ஆம் வேற்றுமை ______________________________

   7ஆம் வேற்றுமை ______________________________

புள்ளிகள் 15

**6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் நிரப்புக.**

1. குழலி சூடிய மல்லிகைப்பூவில் இருந்து ________________ வீசியது.
( நறுமனம், நறுமணம் )

2. மாவீரர் நாளன்று துயிலும் ________________ ச் சென்று வழிபட்டனர்.
( இல்லத்திற்கு, இள்ளத்திற்கு )

3. வந்தாரை வரவேற்று நொந்தாரைத் தாங்குவது தமிழ் மண்ணின் ________________ ஆகும்.
( மான்பு, மாண்பு )

4. பகைவர் ________________ ஆநிரைகளைக் கடத்திச் சென்றனர்.
( கன்றோடு, கன்ரோடு )

5. சங்கிலியன் ________________ எதிர்த்துப் போரிட்டான்.
( போர்த்துக்கேயறை, போர்த்துக்கேயரை )

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- வில்லுப்பாட்டு
- கடல்கொண்ட தமிழகம்
- சூழல் மாசடைதல்
  - சூழல் மாசடைவதற்கான கரணியங்கள்
  - அதனால் மக்களுக்கு ஏற்படும் தீமைகள்
  - அதனைத் தடுப்பதற்கான வழிகள்

புள்ளிகள் 20